இன்றையதினம் தமிழகத்திலே பாதிக்கப்பட்டன. தொழிலாளர்கள் வேலை இழந்து பட்டினி கிடக்கிறார்கள். எங்களைப் போன்ற விவசாயிகள் தாங்கள் இட்ட பயிரை மின் ாரத்தை நம்பி வடஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மற்றும் தர்மபுரி போன்ற மாவட்டங்களில் முழுக்க முழுக்க மின்சாரத்தை நம்பியே பயிரிட்டவர்கள் இன்றையதினம் வடஆற்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டு பல்லாயிரக்கணக்கான ஏரிகளில் போதிய தண்ணீர் வரவில்லை. தீபாவளியின்போது ஓரளவுக்கு ஒரு வார கால மழை பொழிந்தது. ஏரி குளங்கள் நிரம்பியதா என்றால் நிச்சயமாக இல்லை. ஏரி குளங்கள் நிரம்பாத காரணத்தால் கிணறுகளில் ஓரளவுக்கு தண்ணீர் வந்தது. கிணறுகளில் ஓரளவுக்கு தண்ணீர் இருக்கிறதே என்று இதை நம்பி பயிரிட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் விவசாயிகள் பயிரிட்டார்கள். ஆனால் நிலைமை என்ன. இன்றையதினம் வடஆற்காடு மாவட்டத்தில் அல்லது மின் சாரத்தை நம்பியிருக்கிற பல்வேறு மாவட்டங்களின் நிலைமை பல்லாயிரக்கணக்கான ஏக்கர் சாவி. பல்லாயிரக்கணக்கான ஏக்கரில் பொன்னி போன்ற பயிர்கள் கதிர் வாங்காமல் இருக்கிறது. காரணம் கதிர் வாங்குகின்ற அந்த நேரத்தில் மின்சாரம் வரவில்லை. மின்சாரம் வராத ஒரு நிலைமையில் தண்ணீர் இறைக்கமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் ஏதோ பங்களாவிலே குரோட்டன் செடி பயிரிடுவது போன்று பயிர்கள் காயவில்லையே தவிர அதனுடைய பலன் விவசாயிகளுக்கு போகவில்லை. நாட்டிலே உற்பத்தி ஆக வேண்டிய உணவு நிலமை.....

நுகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஆ) அதிகாரிகள் மாடம் காலியாகயிருத்தல்.

திரு. துரைமுருகன். ஐ ஆம் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார் மிக முக்கியமான இந்த மின்சார வாரிய பட்ஜெட் விவாதத்திலே அந்தத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒருவர் கூட அதிகாரிகள் அமரும் இடத்தில் காணப்படவில்லை. அப்படி என்றால் இந்த சட்டசபைக்கு என்ன மதிப்பு; இங்குள்ள உறுப்பினர்களுக்கு என்ன மதிப்பு, அந்த அமைச்சருக்குத்தான் என்ன மதிப்பு. அந்த இலாக்கா சம்பந்தப்பட்டவர்கள் சீப்-இன்ஜினியர், அல்லது போர்டு சேர்மேன் யாரும் அந்த இடத்தில் இல்லை. இது இந்த அவையை மிகவும் துட்சமாக மதிக்கிறார்கள் அவர்கள் என்றுதான் அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிகாரிகள் அவைக்கு வரவேண்டும் என்று அவசியம் கிடையாது. அவர்களுக்கு இடம் போட்டிருக்கிறது. அவர்கள் வராவிட்டால் அது ஒரு குறையாக சொல்லவேண்டாம். அமைச்சர் சொன்னால் அவர்கள் வந்துவிடப்போகிறார்கள்.

திரு. துரைமுருகன்: அதிகாரிகள் ஹவுஸ்க்கு வரக்கூடாது என்று தாங்கள் தீர்ப்பு வழங்குவது அவ்வளவு நல்லது அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: அது தீர்ப்பு அல்ல. அமைச்சருக்கு உதவி புரியவேண்டும் என்ற முறையில் அவர்கள் வருகிறார்கள். அவைக்கு உதவி செய்வதற்கு அவர்கள் வர வில்லை.

திரு. துரைமுருகன்: வழக்கமாக சட்டமன்ற நடவடிக்கைகள் நடக்கும்போது உறுப்பினர்கள் பேசும்போது அமைச்சருக்கே எல்லா விவகாரமும் தெரியாது. ஒரு இலாக்காவிலே சம்பந்தப் பட்ட விவகாரங்கள் அத்தனையும் கற்று உணர்ந்த கலை மகளின் மகன் அல்ல அமைச்சர்கள். ஆகவே அவர்கள் வராதது இந்த அவையை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதில் இந்த அவையை அவமானப்படுத்துவது எதுவும் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இல்லாமல் இருந்தால்தான் அவையை அவமதிப்பது போல் ஆகும். அதிகாரிகள் இல்லா விட்டால் அவையை அவமதிப்பது போல் ஆகாது. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் உரை ஆற்றிய பிறகு அது முடிந்து அதற்கு பிறகு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு வர இருந்தது. ஆகவே அவர்கள் தயாராகத்தான் இருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் உரை முடிந்த பிறகு அதிகாரிகள் இப்போது வந்துகொண்டிருக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகளைப் பார்த்து பேசவேண்டாம்; அமைச்சர்களைப் பார்த்து பேசினால் நிச்சயமாக அக்கறை காட்டப்படும், நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட மின்சார அமைச்சர் அவர் களைப்பற்றி அல்ல விவாதம், அவர் இந்த சப்ஜெக்ட்டைப் பற்றி நன்கு தெரிந்தவர். அவரைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக அவை நிகழ்ச்சியைப் பற்றி சொல்கிறேன். பொதுவாக இந்த மின்சாரத் துறை பட்ஜெட் மிகவும் முக்கியமானது. அதுவும் மற்ற விவாதங்கள் நடக்கும்போது அந்த இலாக்கா அதிகாரிகள் —— இப்போது அதிகாரிகள் வந்துவிட்ட காரணத்தால் இந்த பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.